தியாகராஜர் ஆராதனை நாடெங்கும் நடக்கும் நாளினை யொட்டி இக் கட்டுரையைப் பிரசுரித்து நாதயோகிக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.



1

"சரணாகதி" என்று விபீஷணன் சாற்றியதும் கருணாநிதியான ராமபிரான் கரைந்து விட்டார். "அபயம்" என அவன் அலறியதும் அருள்மாரி அகமுருகி விட்டார். அப்போது பொங்கிய கிருபா வேகத்தில் வெறுமே சரணமும் அபயமும் தந்தால் மட்டும் போதாது என எண்ணி, உடனேயே விடணனுக்கு லங்கா ராஜ்யத்தைப் பட்டம் கட்டி விட்டார்! ஆம், ராவணனோடு போர் தொடங்கு முன்பேதான்!

# ஐயன் சங்கடமும்

ரா. கணபதி

பிறகு ராவணனின் சாரரான சுக சாரணர் வந்தனர். கடைசி விநாடி வரை சமாதானத்துக்கு முயல்வதே ராஜ தர்மம். எனவே இவர்களை ராவணனிடம் திருப்பி அனுப்பும்போது ஸ்ரீராமன், சீதையை அவன் தம்மிடம் ஒப்புவித்துவிட்டால் யுத்தம் செய்யாமல் அவனை விட்டுவிடுவதாகச் செய்தி அனுப்புகிறார். பிற்பாடு யுத்தரங்கத்திலேயே, "இன்று போய் நாளை வா" என்று தசமுகனை அனுப்பும்போது தாசரதி, "இப்போதுகூட ஜானகியை நீ என்னிடம் சேர்த்து விட்டால் போரை நிறுத்திவிடுகிறேன். உன்னை விட்டு விடுகிறேன்" என்கிறார்.



ஆனால்? லங்கைக்கு விபீஷணன் அரசனானால் ராவணன் அங்கேயே அவனுக்கு அடங்கிய சாதாரணப் பிரஜையாக இருப்பது நடக்கிற காரியமா? லங்கேச்வரன் என்பதாக, "ஈச்வர" பட்டம் பெற்ற மாவீரனுக்கு இப்படிப்பட்ட இழிநிலை அளிக்க ஸ்ரீராமன்தான் முற்படுவாரா?

தர்ம விக்ரஹமான ஐயனுக்குத் தர்மசங்கடம்தான். கருணைத் தர்மத்தால் விபீஷணனுக்கு லங்காதிபத்தியம் நல்கிவிட்டார். ராஜ தர்மப்படி இறுதிவரை சமாதானத்துக்கும் முயன்றார். இவர் வாக்கை ஏற்று ராவணன் மட்டில் சீதையை இவரிடம் சேர்த்துச் சமாதானத்துக்கு வந்திருந்தால் அவனுக்குரிய அரசை இவர் எப்படி ஈந்திருக்க முடியும்?

தர்மசங்கடத்துக்கு ஐயன் கண்ட விடை ஸ்ரீ தியாகையர்வாள் ஒருவருக்கே தெரிந்தது. ராமாயணம் பாடிய மற்ற மகாபுருஷர் எவருக்கும் தெரியாத மர்மம், சங்கீத சாதனை என்ற மாக யோகத்தைச் செய்த தியாக ராஜருக்கே தெரிய வந்தது.

ஒரே சொல் வீரனான ராமன் விடணனுக்கு லங்கா ராஜ்யத்தைத் தந்தது தந்ததுதான். ராவணன் சமாதானத்துக்கு வந்தால் இருக்கவே இருக்கிறது அயோத்தியா ராஜ்யம்! ஸ்ரீ ராமனின் வனவாசம் முடிந்து, லங்கையரசை விடப் பன்மடங்கு பெரிதான அயோத்தி சக்ராதிபத்தியம் அவரை வந்தடையும் தருவாய்தான் நெருங்கி விட்டதே! பதினாலாண்டுகளுக்கு முன் மாற்றுத்தாய்க்காக அதைப் பரித்யாகம் செய்த பரம புருஷன், இன்று மாற்றானுக்கு அதை ஈந்துவிடத் திருவுளம் பற்றி விட்டாராம்! 'இளவலை இந்த ராவணன் தலை சாய்ந்த பின் நாமே அதைப் பெறலாம்' என்ற எண்ணத்தில் அல்ல. எப்படி விபீஷணனுக்குச்



ரெஞ்சினித்தவம் அளித்தாரோ அப்படியே ராவணனையும் ரெஞ்சியாக்கி, சாசுவதமாக அவனுக்கே அயோத்திப் பேரரசை வழங்கி விட எண்ணி, அதை அவனிடமே சொல்லி யும் விட்டாராம்.

''**ஸாம தான பேத தண்ட**'' என்ற கிருதியில் **ஸதமுகா ஸயோத்ய நிச்சே ஸண்டிவி** (''நிரந்தரமாக அயோத்தியை அளிக்கிறேன்'' என்றும்) என்ற ஒரே வரியில் இந்த தியாக மகா சமுத்திரத்தை அடக்கி விடுகிறார் ஸ்ரீ தியாகராஜர்.

ஆதியில் தந்தை வாக்குக்காகத் தியாகம்; இன்று தன் வாக்குக்காகவே தியாகம். ஐயர்வாளின் வாக்கு) தால விருட்சத்தின் பின் கண் மறைவாக நின்று விட்டாராம். தம் ஆற்றல் ஞாபகம் வந்தவுடன் ஆவேச மான அன்புக் காப்பைப் புரிய (''ப்ரேம பாலனமு ஸேய'') மரத்தின் பின்னிருந்த நிலையிலேயே கணை தொடுத்துவிட்டார்!

வெறும் கணையின் கதியாயின், தர்ம சாஸ் திரங்களைப் புரட்டி வாதப் பிரதி வாதம் செய்யலாம். கருணையின் கதியில் முதலில் பதுங்கிப் பின்னர் பிதிர்ந்து வெடித்த ஆற்றலை எப்படி விவாதிப்பது?

''எந்து தாகினாடோ?'' கிருதியில் இவ் வரிய கருத்தை இசைத்து, பக்தரைக் காக்

# ஐயாவாள் சங்கீதமும்



கர்மயோகியான ஐயன் எத்தனை இலகுவாக, எளிதாக, அநாயாசமாகத் தியாகம் செய் தாரோ அத்தனை இலகுவாக, எளிதாக, அநா யாசமாகவே அதைப் பாடிக்கொண்டு போகி றார், நாதயோகி தியாகையர்.

• • •

**ஸ்ரீ**ராமனின் மாபெரும் தர்மசங்கடம் வாலி வதம்தான். வாலியின் வர பலத்தால், இவர் அவனுக்கு நேரே சென்றால் இவரது பலத்தில் பாதி (ஏற்கனவே மகா பலிஷ்டனான) அவனைச் சென்றடைந்துவிடும். பிறகு ராமன் தோற்கவேண்டியதுதான். தமக்குத் தோல்வி என்பது மட்டுமல்ல. சரணம் என்று சுக்ரீவன் வந்தவுடன் இவர் கருணையின் ஆவேசத்தில் அவனுக்கு வாக்குத் தந்த காப்புப் பணி என்னாவது? ''என் நற்பெயரைக் கைவிட்டா வது பக்தனைக் கைவிடாது காப்பேன்'' என்றே, வாலிக்கு நேரே வராமல் மரத்து மறைவிலிருந்து வதைத்தார்.

இது பொதுவாகச் சொல்லும் சமாதானம். ஆனால் தியாகையருக்கென ஓர் அநாயாசத் தீர்வு உண்டே, அதைப் பார்ப்போம்:

நமக்கு மிகவும் ஆப்தர்கள் ஆபத்தில் சிக்கிக்கொள்கையில் நமக்கே பொறி புலன்கள் செதறி நாம் பஞ்சையாகிவிடுவதுண்டு அல் லவா? அன்பின் சக்தி அளப்பரியது என்ப தற்கு எதிர் வெட்டாக அன்பே நம்மை இச் சந்தர்ப்பங்களில் பதறாக்கி விடுவதும் உண்டு. இப்படித்தான் சாக்ஷாத் நாராயணனுக்கும் பிரஹ்லாதன் தந்தையிடம் படும் பாட்டைக் கண்டபோது, தன் நாராயணத்வமே பாச வேகத்தில் மறைய, கொடுமையைக் காணச் சகியாமல் தூணுக்குள் புகுந்து கொண்டு விட்டாராம்! அப்புறம் தம் சக்தி நினைவுக்கு வர, அதைப் பிளந்து கொண்டு வெளி வந்தார். பிற்பாடு ராமாவதாரம் செய்தபோதும், வாலியிடம் சுக்ரீவன் படும் பாட்டைக் கண்டவுடன் மனம் தாங் கவே முடியாமல் (''மனஸு தான ஜால லேக'' என்பது

கப் பரிந்தோடி வரும் பரமன், அதே அன்பி னால் ஓடி ஒளிந்தும் விடுகிறானே என்று அங்கலாய்க்கிறார்.

• • •

**ஸ்ரீ**மத் ராமாய ணத்தில் ஏற்கனவே காணப்படும் இரு தர்மசங்கடங்களின் மர்மமறிந்து புதிர் விழ்த்த ஐயர்வாள், மூன்றாவதாகத் தாம் மட்டுமே அறிந்த ஒரு சங்கடத்தை விவரிக் கிறார், ''வாசாமகோ சரமே'' என்ற கிருதியில்.

மாரீச மானைக் காணுமுன் கவரிமான் ஒன்றைக் கண்டு ஆசைப்பட்டாள் அன்னை ஜானகி. சுவேச்சை மிக்க அம்மான் எம்மான் பிடிக்கு அகப்படாமலே ஓடியது. 'அம்பால் அடித்துக் காயப்படுத்தினாலன்றி மான் பிடிபடாது. உயிரைப் போக்காமலே அடிக்க வேண்டும். ரோம மயமான வாலில் அடித்தால்தான் வலி குறைந்தபட்சமாக இருக்கும்' எனக் கருதினார் காகுத்தர்.

ராம பாணம் மானின் வாலை நோக்கிப் பறந்தது.

ஆனால் கவரி மானான அதற்குச் சவுரி போன்ற வாலில்தானே விசேஷப் பெருமை? வாலில் சிறிது நறுக்குண்டாலும் தன் கௌரவத்துக்குப் பங்கம் என எண்ணியது அச்சிறு மான். பெருமான் எய்த சரம் ராம பாணத்துக்கே உரிய வேகத்தோடு வர, மானம் மிக்க மான் தன் முகத்தைச் சடேரென வளைத்து வாலை மூடிக் கொண்டது! ஆம், அம்பை முகத்தில் வாங்கிக் கொண்டு ஆவியே துறக்குமாம், அழகு மூலமான வாலை இழக்காதாம். அத்தனை தன்மானம்!

பிரபு உருகிவிட்டார். ஆயினும், ''குறி வைக்கத் தப்பாத ராமசரம்'' என்றே பெயர் கொண்ட தமது கணை, அதோ மானை நோக்கி விரையும்போது, அவ்வுயிரை மீட்க வழி ஏது? தர்ம சங்கடமான நிலைதான்.

ஏற்கனவே காவியங்களில் காணும் சங்கடங்களுக்குத் தீர்வு கண்ட தியாகையர் தாம் மட்டுமே அந்த இச்சங்கடத்தைத் தீர்க்காதிருப்பாரா? இந்த அற்புதத் தீர்வை இசைப்பதற்கேதான் அவர் சங்கடத்தைப் பாடியதே.

வாலி — சுக்ரீவர் போரின்போது, அன்பினாலேயே பலவீனமுற்றுத் தால விருட்சத்தின் பின் ஒளிந்த ஐயனுக்கு இப்போது அன்பின் சக்தியில் தம்மையே தாம் விஞ்சும் வில் வீச்சுத் திறன் உண்டாகி விட்டதாம். அன்புத் திறன் இரட்டிப்பாக்கிய அம்புத் திறனுடன் முன்பு விடுத்த கணையை நோக்கி இன்னொரு சரத்தை எய்தார். முதல் அம்பு காற்றெனக் கடுகிச் சென்று மான் முகத்தில் தைக்கும் முன்பே, இரண்டாம் அம்பு மனோவேகத்தினும் விசையாகத் துள்ளிச் சென்று, முதற் பாணத்தைத் தாக்கித் தூள் தூளாகச் சிதறடித்து விட்டது! மான் உயிர் தப்பியது.

அதன் மான உணர்ச்சிக்கு அருளாளன் தந்த வெகுமானம், தப்பாத ராம பாணத்தையும் தப்ப வைத்து, தம்மிடமே தமக்குத் தோல்வி உண்டாக்கிக் கொண்டதுதான். மூவுலகில் எவராலும், மும்மூர்த்தியராலும் கூடத் தடுக்க முடியாத ராம சரத்தைத் தாமே தடுத்துப் பொடித்துப் போகச் செய்து தோல்வியிலேயே வெற்றி கண்டார் — வெறும் புஜபல பராக்கிரமத்தை ஜீவகாருண்யத்தால் வெற்றி கொண்டார்.

இங்கே ஐயர்வாள் வேதாந்த சாஸ்திரங்களின் ஜீவாதாரமான வாதம் ஒன்றை ராம பாணம் போலவே தம் கானத்தால் எளிதே சிதற வைத்து விட்டாரோ? 'நமது பழவினையில் ''பிராரப்த கர்மம்'' என்ற பெயரில் பலன் கொடுக்கத் தொடங்கி விட்டதை இறைவனும் மாற்ற முடியாது; ஏனெனில் வினைப் பயன் என்பது ஈசனே செய்த விதி; முன்னமே எய்துவிட்ட அம்பைப் போல் பிராரப்தம் ஜீவனைத் தாக்கியே தீரும்' என்று சாஸ்திரங்கள் கூறும். பகவானின் பரங்கருணை எழுச்சி கொண்டால் பழவினைக் கணையையும் அது வீழ்த்திவிடும் என்று ஐயர்வாள் நமக்கு உணர்த்தி உற்சாகமும் உத்வேகமும் ஊட்டுகிறாரோ?